**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 21 August 2022

# வீட்டிலிருந்தபடியே பாலியல் நோய் பரிசோதனை சாத்தியம்

பாலியல் தொடர்பு மூலம் பரவக் கூடிய நோய்களை ஆடவர்கள் வெளியே தெரியாமல் அந்தரங்கமாக வீட்டிலிருந்தபடியே பரிசோதித்து தெரிந்துகொள்ள உதவும் ஒரு செயலியை உயர்கல்வி நிலைய மாணவர்கள் குழு ஒன்று இப்போது மேம்படுத்தி வருகிறது.

அந்தச் செயலி ஆடவர்களுக்கு மட்டும் உரியது. ஒருவர் தனது அந்தரங்க உறுப்பைக் காட்டும் படத்தை அந்தச் செயலியின் மூலம் தாக்கல் செய்ய வேண்டும்.

அப்படி செய்த பிறகு ஏதாவது பாலியல் நோய் இருக்கிறதா என்பது இயந்திர மனிதன் தொழில்நுட்பம் மூலம் கண்டறியப்படும்.

அந்த மாணவர்கள் குழு பரிசோதனைக் கருவி போன்ற கூடுதலான பல அம்சங்களையும் இப்போது உருவாக்கி வருகிறது.

ஒருவர் அவருடைய சிறுநீர் அல்லது ரத்த மாதிரியைத் தாக்கல் செய்தால் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை நடத்தப்பட்டு பாலியல் நோய் ஏதேனும் இருக்கிறதா என்பது முடிவு செய்யப்படும்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் நேற்று ஆறாவது மாபெரும் மருத்துவ சவால் நிகழ்ச்சி நடந்தது. அதில் பொதுப் பிரிவில் அந்த மாணவர் குழு $20,000 முதல் பரிசை வென்றது. நேற்றைய நிகழ்ச்சியில் சுகாதார அமைச்சர் ஓங் யி காங் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.